**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093826

1. District : மாவட்டம் தஞ்சாவூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 01/2019 | Date: நாள் 31.01.2019.

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7 of Prevention of Corruption (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 30.01.2019 | Date from : நாள் முதல் - | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு 16.00 hrs | Time from : நேரம் முதல் - | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.01.2019. | Time : நேரம் 09.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 31.01.2019. | Time : நேரம் 10.30 hrs..

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — நேரிலாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் பின்னையூர் - [illegible] தென்மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி உணவுப் கழக. நேரடி நெல் கொள்முதல் நிலையம், பின்னையூர் -30.கி.மீ தென்கிழக்கு
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. கார்த்திகேயன் | (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் பிச்சைசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்திய | (e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி மேலத் தெரு, பின்னையூர். ஒரத்தநாடு தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ஜெயசீலன். Bill Clerk. (BC)
   தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக. நேரடி நெல் கொள்முதல் நிலையம் பின்னையூர் கிராமம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — [illegible] தாமதம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரனை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 31.01.2019ம் தேதி 09.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.P.கார்த்திகேயன், வயது 44/2019, த/பெ.பிச்சை சாளுவர், மேலத்தெரு, பின்னையூர், ஒரத்தநாடு தாலுக்கா, தஞ்சாவூர் என்பவர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: P.கார்த்திகேயன், வயது 44/2019, த/பெ.பிச்சை சாளுவர், மேலத்தெரு, பின்னையூர், ஒரத்தநாடு தாலுக்கா, தஞ்சாவூர். பெறுநர்: உயர்திரு லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், தஞ்சாவூர். அய்யா, நான் தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தாலுக்கா, பின்னையூர் கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமாக பின்னையூர் மேற்கு கிராமத்தில் புல எண்.442/2 ல் 1.90 ஹெக்டேர் நன்செய் விவசாய நிலம் உள்ளது. நான் கடந்த பருவத்தில் மேற்படி வயலில் NLR சம்பா நெல் சாகுபடி செய்திருந்தேன். நான் மேற்படி வயலில் விளைந்த நெல்லை பொங்கலுக்கு பிறகு அறுவடை செய்து, அறுவடை செய்த நெல்லை சுமார் 400

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளதை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு P. Karthikeyan.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் R. VENKATESAN
Rank: நிலை Inspector of police. No. எண்
VSAC, Thanjavur.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31.01.2019. 12.45 hrs.

மூட்டைகளை பின்னையூர் கிராமத்தில் உள்ள TNCSC நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்ய TNCSC களத்தில் கொட்டி வைத்திருந்தேன். ஆனால் நேரடி கொள்முதல் நிலையத்தில் நெல் பிடிக்காமல் 1 வாரமாக கிடந்தது. நான் பட்டியல் எழுத்தர் (BC) திரு.ஜெயசீலன் அவர்களை அணுகி, நெல் கொண்டுவந்த விபரம் கூறியபோது, எவ்வளவு நெல் என்று கேட்டார். அதற்கு 400 மூட்டைகள் என்றேன். அவர் விபரத்தை டோக்கன் பதிவேட்டில் பதிவு செய்து கொண்டார். அதன் பிறகு எப்போது நெல்லை எடை போடுவீர்கள் என்று 29.01.2019 ஆம் தேதி கேட்டேன். 30.01.2019 ஆம் தேதிதான் நெல் போடமுடியும் என்று சொன்னார். அதன்பிறகு நாளை வருகின்றேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு நான் 30.01.2019 ந்தேதி காலை பின்னையூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு BC ஜெயசீலன் இல்லை. அவர் மாலை 4 மணிக்கு வந்தார். அதன்பிறகு கொள்முதல் நிலையத்தில் இருந்த என்னுடைய நெல்லைப் பார்த்துவிட்டு எவ்வளவு மூட்டை வரும் என்று கேட்டார். நான் சுமார் 300 மூட்டைகள் வரும் என்றேன். அதற்கு அவர் ஒரு மூட்டைக்கு ரூ.35/- வீதம் 300 மூட்டைக்கும் மொத்தம் ரூ.10,500/- வருகின்றது. அதில் ரூ.500/- ஐ குறைத்துக்கொண்டு ரூ.10,000/- கொடு என்று கேட்டார். நான் பணம் தற்சமயம் கையில் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நெல்லை எடை போடச் சொல்கிறேன். நாளை வந்து கட்டாயம் கொடுத்துவிடுங்கள் என்றார். பின்னர் நெல்லை எடை போட்டார்கள். மேற்படி எனது நெல் 301 மூட்டைகள் வந்தது. அப்போது இரவு மணி 9 ஆகிவிட்டது. பின்னர் நான் நெல் பணம் எப்போது கிடைக்கும் என்று BC யிடம் கேட்டேன். அதற்கு அவர் வங்கி மூலமாகதான் பணம் கிடைக்கும் என்றும், அந்த பணத்தை வங்கிக்கு அனுப்புவதற்கு 2 நபர்களுடைய வங்கி கணக்கு எண் புத்தகத்தின் ஜெராக்ஸ் காப்பி கொடுக்கும்படி கேட்டார். நான் அவரிடம் என்னுடைய தஞ்சாவூர் கரூர் வைஸ்யா வங்கி கணக்கு எண்.1191155000152164-ன் புத்தகத்தின் நகலையும், என் அம்மா ஜெயலெட்சுமியின் ஒரத்தநாடு கிளை கனரா வங்கியின் கணக்கு எண்.4684101002435 புத்தகத்தின் நகல்களையும் கொடுத்தேன். அப்போது BC ஜெயசீலன் இன்றைய கணக்கில் அம்மா ஜெயலெட்சுமி பெயரில் 74 மூட்டைகளுக்கு பில் போடுவதாகவும், மீதம் உள்ள மூட்டைகளை நாளைய கணக்கில் என் பெயரிலும், என் அம்மா பெயரிலும் போட்டு கொடுப்பதாக கூறினார். மேலும் அவர் கேட்ட பணம் ரூ.10,000/- ஐ கொடுத்துவிட்டு 3 ரசீதுகளையும் வாங்கிச்செல்லும்மாறு கூறினார். நான் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு அவர் கேட்ட லஞ்சப்பணத்தை கொடுக்க விரும்பம் இல்லை. இரவு ஆகிவிட்டதால், வீட்டிலேயே இருந்துவிட்டு இன்று 31.01.2019 ந்தேதி காலை 08.30 மணிக்கு பின்னையூர் TNCSC நேரடி நெல் கொள்முதல் நிலைய BC ஜெயசீலன் மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு

எழுதிக்கொண்டு எனது இரு சக்கர வாகனத்தில் புறப்பட்டு, தஞ்சாவூர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து, தங்களிடம் புகார் மனு கொடுக்கின்றேன், மேற்படி பட்டியல் எழுத்தர் ஜெயசீலன் என்னிடம் கேட்ட ரூ.10,000/-ஐ ஏற்பாடு செய்து கொண்டு வந்துள்ளேன். பின்னையூர் நேரடி நெல் கொள்முதல் நிலைய பட்டியல் எழுத்தர் ஜெயசீலன் மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். நான் BC ஜெயசீலனிடம் கொடுத்த என் அம்மா ஜெயலெட்சுமி மற்றும் என்னுடைய வங்கி கணக்கு புத்தக நகல்களை இணைத்துள்ளேன். இப்படிக்கு Sd/-. P.Karthikeyan, 31/01/19.

இன்று 31.01.2019 ந் தேதி காலை 09.30 மணிக்கு தஞ்சாவூர் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் R.வெங்கடேசன் ஆகிய நான் அலுவலக பணியில் இருந்தபோது ஒரத்தநாடு தாலுக்கா பின்னையூர் கிராமத்தைச் சேர்ந்த P.கார்த்திகேயன், S/o.பிச்சை என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று, புகாரின் உண்மைத் தன்மை பற்றி விசாரித்தும், புகார்தாரர் மற்றும் எதிரியின் நன்னடத்தைகள் பற்றி விசாரணை மேற்கொண்டும், வழக்கின் உண்மைத் தன்மையை உறுதிபடுத்திய பின்பு தஞ்சாவூர் ஊ.த.க பிரிவு குற்ற எண்.01/2019 சட்டப்பிரிவு 7 Prevention of Corruption (Amendment) Act, 2018 ன்படி 31.01.2019 - 10.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

ஒம்-
R.வெங்கடேசன்,
Inspector, V&AC, Thanjavur

இத்துடன் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு அசல் மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று கோப்பிலும் வைக்கப்பட்டது.

31.01.2019.
Inspector of Police,
V&AC, Thanjavur.